செய்தி வெளியீடு எண்: 265 நாள்: 17.04.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (17.4.2018) தலைமைச் செயலகத்தில், கோடை காலத்தில் தமிழ்நாட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

மே மற்றும் ஜுன் மாதங்களில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு, ஊரகப் பகுதிகளுக்காக ரூ.50 கோடியும், நகராட்சி மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்காக ரூ.120 கோடியும், பேரூராட்சிகளுக்காக ரூ.14 கோடியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காக ரூ.16 கோடியும், என மொத்தம் ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், மழைநீர் சேமிப்பு தொடர்பாகவும், கழிவுநீரை சுத்திகரித்து நல்ல நீராக மாற்றி அதை பயன்படுத்துவது தொடர்பாகவும் திட்டங்களை தீட்டவும் உத்தரவிட்டார்கள்.

சென்னை மாநகரை பொறுத்தவரை, குழாய்கள் மூலம் தண்ணீர் செல்லாத இடங்களுக்கு தண்ணீர் வழங்க ஏதுவாக, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலம் புதிய திட்டம் தீட்டவும்;

பிரதம மந்திரியின் "பசல் பீமா யோஜனா திட்டம்" தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், பயிர் காப்பீட்டு திட்டத்தில் நிலுவையிலுள்ள பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை வேளாண் பெருமக்களுக்கு உடனடியாக காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து பெற்றுத் தரவும் உத்தரவிட்டார்கள்.

அரசு செயலாளர் அந்தஸ்தில் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களது மாவட்டங்களுக்கு வரும் வாரத்தில் நேரடியாக சென்று குடிநீர் விநியோக நிலையினை கண்காணித்து மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) திரு.ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு.கே. பாஸ்கரன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**